# பருவத் தேர்வு - 2

## மகிழ்ச்சி - மூன்றாம் வகுப்பு

மதிப்பெண்கள் : 50 காலம் : 2½ மணி

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **1 x 5 = 5**

1. நண்பனைத் தேடி அலைந்தவன் ________________.
2. ஓடி விளையாட முடியாது என்றவன் ________________.
3. கவிதாவிற்கு ________________தான் தோழி.
4. பறவைகள் ________________வெனப் பறந்தன.
5. சிறுவர்கள் ________________என்று ஓடினர்.

**II. எதிர்ச்சொல் எழுதுக.** **1 x 5 = 5**

1. பெரியர் x ________________
2. நன்மை x ________________
3. அரிய x ________________
4. அறிவுடையார் x ________________
5. புறம் x ________________

**III. பொருள் எழுதுக.** **1 x 5 = 5**

1. மாண்பு – ________________
2. நன்னயம் – ________________
3. இன்னா – ________________
4. குணம் – ________________
5. சீர் – ________________

**IV. பிரித்து எழுதுக.** **3 x 1 = 3**

1. துணிப்பை – ________________

2. நீரிலிருந்து – ____________

3. அனுமதிச்சீட்டு– ____________

**V. சேர்த்து எழுதுக.** **2 x 1 = 2**

1. மளிகை + பொருட்கள் = ____________
2. கடும் + கோபம் = ____________

**VI. கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள வினைச்சொற்கள் எக்காலத்தைக் குறிக்கின்றன என எழுதுக.** **5 x 1 = 5**

1. பூனை எலியைப் பிடித்தது.
2. மயில் நடனம் ஆடியது.
3. வளவன் வேலை செய்கிறான்.
4. மலர் கடிதம் எழுதுவாள்.
5. நான் பாடம் படிக்கின்றேன்.

**VII. கீழ்க்காணும் சொற்றொடர்களில் வந்துள்ள பால் வகையை எழுதுக.** **5 x 1 = 5**

1. அம்மா சமைத்தார். ____________
2. சேகர் வந்தான். ____________
3. புலி உறுமும். ____________
4. சிறுவர்கள் விளையாடினர். ____________
5. குயில்கள் பறந்தன. ____________

**VIII. விடுபட்ட ஓரெழுத்துச் சொற்களை எடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

| மா | கை | பூ | தீ | தை |
|---|---|---|---|---|

1. தோட்டத்தில் ________ பூத்தது.
2. ________யை நீரூற்றி அணைத்தேன்.
3. முக்கனிகளில் ஒன்று ________.
4. தமிழ் மாதங்களில் ஒன்று ________.
5. எனக்கு இரண்டு ________கள் உள்ளன.

**IX. பின்வரும் வினாக்களில் எவையேனும் ஐந்திற்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

1. எலி யாரைத் தேடிப்போனது?
2. "இனியவை நாற்பது" என்னும் நூலின் நோக்கம் என்ன?
3. உனக்குத் தெரிந்த குருவிகளின் பெயர்கள் மூன்றினை எழுதுக.
4. மன்னரின் சந்தேகத்தைத் தீர்த்தவர் யார்?
5. எது நிலையான உடைமை?
6. இன்னா செய்தாரை தண்டிக்கும் வழி யாது?
7. "தேசிய இளைஞர் தினம்" எப்போது கொண்டாடப்படுகிறது?
8. யாரோடு நட்புக் கொள்ள வேண்டும்?
9. "நீதிநெறி விளக்கம்" பாடலை இயற்றியவர் யார்?
10. கோபிகாவும் குழந்தைகளும் எங்கே சென்றனர்?

**X. பின்வரும் வினாக்களில் எவையேனும் ஒன்றிற்கு மட்டும் விடையளிக்கவும்.** **1 x 5 = 5**

1. திருக்குறள்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக.
2. "நல்லாரைக் காண்பதுவும்" எனத் தொடங்கும் மூதுரை பாடலை எழுதுக.